வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 14.02.2026 சனிக்கிழமை | இதழ் : 45 | பக்கங்கள் : 08

# ஏக்கிய இராஜ்ய வரைவை நிராகரிக்கும் கலந்துரையாடலில் பங்கேற்காது தமிழரசு!

## கஜேந்திரகுமாருக்கு சி.வி.கே. சிவஞானம் பதில்

யாழ்ப்பாணம், பெப்ரவரி. 14

**தமிழர்களது இனப்பிரச்னைக்குத் தீர்வாக அரசு கொண்டுவரவுள்ள ஏக்கிய இராஜ்ய வரைவை நிராகரித்து அதற்குப் பதிலாக கூட்டாட்சி (சமஷ்டி) தீர்வை ஒரே குரலில் முன்வைப்பது தொடர்பாக, தமிழ் தேசியப் பேரவை ஏற்பாடு செய்துள்ள கலந்துரையாடலில் இலங்கை தமிழரசுக் கட்சி பங்கேற்காது என அறிவிக்கப்பட்டுள்ளது.**



இந்தக் கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்குமாறு இலங்கை தமிழரசுக் கட்சிக்கும் தமிழ்த் தேசிய பேரவையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடிதம் மூலம் அழைப்பு விடுத்திருந்தார்.

**அந்தக் கடிதத்தில்**

இனப்பிரச்சினைக்கான நிலையான அரசியல் தீர்வாக, தமிழ் மக்கள் தேர்தல்களில் தொடர்ந்து கூட்டாட்சி (சமஸ்டி) தீர்வை வலியுறுத்தி ஆணை வழங்கி வந்துள்ளனர். இருப்பினும், அக்கோரிக்கையினைப் புறக்கணிக்கும் வகையில்,

07

# சட்டவிரோத மீன்பிடியை உடனே தடுத்து நிறுத்துக!

## முல்லைத்தீவு மீனவர் நேற்று போராட்டம்

முல்லைத்தீவு, பெப். 14

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை தடை செய்யக் கோரி முல்லைத்தீவு மீனவர்கள் நேற்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு கடற்கரையிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் பங்கேற்ற மீனவர்கள் சட்டவி ரோத தொழில் அதிகரிப்பு, சிறுதொழில் மீனவர்கள் வாழ்வு பாதிப்பு, சட்டவிரோத

07



# ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேராளர் மாநாடு பெப். 22 சாவச்சேரியில்!

யாழ்ப்பாணம், பெப். 14

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேராளர் மாநாடு எதிர்வரும் 22ஆம் திகதி சாவகச்சேரி நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள 5 தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒருங்கிணைத்துச் செயற்படும் இந்தக் கூட்டணி, தனது எதிர்கால அரசியல் நகர்வுகள் மற்றும் கொள்கை விளக்கங்களை முன்வைக்கும் நோக்கில் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த மாநாட்டில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்), செல்வம் அடைக்கல நாதன் (ரெலோ), சுரேஷ் பிரேமச்சந்திரன் (ஈ.பி.ஆர்.எல்.எவ்),

07

# சர்வதேச தர நிலைகளை உள்வாங்கியே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம்!

## நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார



கொழும்பு, பெப். 14

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு குறித்து எதிர்க்கட்சியினர் முன்வைத்துள்ள விமர்சனங்கள் மக்களைத் திசை திருப்பும் முயற்சியாகும் என நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனித உரிமைத் தரநிலைகளை உள்வாங்கியே இந்தப் புதிய வரைவு

07

# தமிழ் அரசியல் பிரச்னைக்கு தீர்வின்றி நாட்டின் முன்னேற்றம் சாத்தியமில்லை!

## பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டு



கொழும்பு, பெப். 14

தமிழ் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தி விட்டு அரசியல் பிரச்னைக்கு தீர்வு காணலாம் என்ற ஆரம்ப கால நிலைப்பாடு பிற்பட்ட காலத்தில் தவறாக அமைந்தது. தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைக்கு தீர்வு காணாமல்

07

# அடக்குமுறையை கையாளும் அரசு!



## நாமல் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 14

அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டதாகவும், தனது தோல்விகளை மறைக்க அடக்குமுறையை கையாள்வதாகவும் நாமல் ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு பின்னர் ஊடகங்களைச் சந்தித்து கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

07

# திஸ்ஸ விதாரண காலமானார்!



கொழும்பு, பெப். 14

லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான அமைச்சர், பேராசிரியர் திஸ்ஸ விதாரண நேற்று காலமானார். மரணமடையும்போது அவருக்கு 91 வயதாகும்.

உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த அவர், ஜயவர்த்தனபுர கோட்டை நகரில் அமைந்துள்ள அவரது

07

# கரைவலை மீனவர் போராட்டம் நிறைவு

கொழும்பு, பெப். 13

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக கடந்த 9 நாட்களாக முன்னெடுக்கப்பட்டு வந்த கரைவலை கடற்றொழிலாளர்களின் சத்தியாகிரகப் போராட்டம், ஜனாதிபதியுடன் இடம்பெற்ற வெற்றிகரமான பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து கைவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்ட கரைவலை

07

# போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு பிணை வழங்காமல் விசாரணைகள்!

## சட்டங்களை இறுக்குகிறது அரசாங்கம்

கொழும்பு, பெப். 14

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களை கைது செய்த பின்னர், அவர்களுக்கு பிணை வழங்காமல் வழக்கு விசாரணை நிறைவடையும் வரை தடுப்புக் காவலில் வைப்பதற்கான சட்டங்களை உருவாக்குவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் நபர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

07

# ஜோன்ஸ்டன் மீண்டும் மறியலில்!

கொழும்பு, பெப். 14

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட 5 சந்தேக நபர்களை

07




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் சைகையை மீறி பயணித்த கப் ரக வாகனம் மீது துப்பாக்கிச் சூடு!

## கிளிநொச்சி தேராவில் பகுதியில்





கிளிநொச்சி, பெப். 14

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேராவில் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் பொலிஸாரின் சைகையை மீறி பயணித்த கப் ரக வாகனத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி தரும்புரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தேராவில் பகுதியில் சந்தேகத்துக்கிடமாக சட்டவிரோத மணல் கொண்டு சென்ற கப் வாகனத்தை மறித்து சோதனையிட முற்பட்டவேளை பொலிஸாரின் சைகையை மீறி குறித்த வாகனம் பயணித்துள்ளது.

இதனையடுத்து குறித்த வாகனத்தின் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட நிலையில், அதனைச் செலுத்தி சென்ற சந்தேக நபர் வாகனத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இதேவேளை சம்பவம் தொடர்பில் தர்மபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# ஊர்காவற்றுறை உருண்டி கோட்டை அபிவிருத்தி முயற்சி சாத்தியமாகிறது!

யாழ்ப்பாணம், பெப். 14

ஊர்காவற்றுறையின் வரலாற்றுச் சிறப்புமிக்க உருண்டி கோட்டை மற்றும் கடவுக்கரை பகுதிகளை மேம்படுத்துவது தொடர்பான முயற்சி சாதகமாகி உள்ளதாக வடக்கு மாகாண சுற்றுலாத்துறை அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

வடக்கு மாகாண சுற்றுலா துறையினர், ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச சபையினர் ஆகியோருக்கிடையில் நேற்று முன் தினம் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன் விளைவாக, அப்பகுதிகளில் நிலவும் நீண்டகாலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பயணிகளின் வசதிக்காக ஊர்காவற்றுறை கடவுக்கரை பகுதியில் நவீன வசதிகளுடன் கூடிய ஓய்வறைகள் மற்றும் சுத்தமான கழிவறைகள் உடனடியாக அமைக்கப்படவுள்ளன.

உருண்டி கோட்டை பகுதியை மையமாகக் கொண்டு சுற்றுலா நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கான முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பணிகளை உடனடியாகத் தொடங்குவதற்கு பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச சபையினர் தமது முழுமையான ஒத்துழைப்பையும் சம்மதத்தையும் வழங்கியுள்ளனர்.

(அ-05)



# தர்மபுரம் பகுதியில் காட்டு யானைகள் வாழை, தென்னைகளை அழித்து நாசம்!

கிளிநொச்சி, பெப். 14

கிளிநொச்சி - தர்மபுரம் பகுதியில் நேற்று முன் தினம் இரவு புகுந்த காட்டு யானைகளால் விவசாயி ஒருவரின், ஒரு ஏக்கர் வரையான வாழை மரங்களை மற்றும் தென்னை முற்றாக அழித்துள்ளன.

புளியம்பொக்கனை கமநலசேவை பிரிவுக்குட்பட்ட தர்மபுரம் பகுதியில் வாழ்வாதாரத்துக்காக வைக்கப்பட்டிருந்த ஒரு ஏக்கர் வாழை, தென்னை மரங்களை யானைகள் முற்று முழுதாக அழித்து துவம்சம் செய்துள்ளன.

குறித்த வாழைச் செய்கை தற்பொழுது அறுவடைக்கு தயாராக இருந்த நிலையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதனால் பல லட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயி தெரிவித்தார்.

எனவே குறித்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் வந்து பார்வையிட்டு நடட ஈட்டை பெற்று தரவேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயி கோரிக்கை விடுத்தார். (அ)

# மாசார் பகுதியில் கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 14

இலங்கை இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், நேற்று முன் தினம் பளை பொலிஸாருடன் மாசார் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கூட்டுச் சோதனையின்போது சுமார் 105 இலட்ச ரூபாய் மதிப்பிலான 14 கேரளக் கஞ்சா பொதிகள் கைப் பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி விழா எவ்வித தடையுமின்றி நடைபெறவேண்டும்!

## சத்தியலிங்கம் எம்.பி. கோரிக்கை

வவுனியா, பெப். 14

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இவ்வருடம் சிவராத்திரி விழா எவ்வித தடையுமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும் என நேற்று நடைபெற்ற வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்தின்போது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் கோரிக்கை விடுத்தார்.

அத்துடன் குறித்த ஆலயத்திற்கான காணி மற்றும் பாதை விடுவிப்பு தொடர்பில் தன்னால் வடக்கு மாகாண ஆளுநருக்கும் வவுனியா வடக்கு பிரதேச செயலாளருக்கும் கடிதம் மூலம் கோரிக்கை விடப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக ஆளுநரால் பிரதேச செயலாளரிடம் அறிக்கை கோரப்பட்டது. பல மாதங்கள் கடந்தும் அந்த அறிக்கை அனுப்பப்படவில்லை. ஏன் அது அனுப்பப்படவில்லை எனவும் அவர் கேள்வியெழுப்பியிருந்தார்.

விரைவில் அறிக்கையை சமர்ப்பிப்பதாக பிரதேச செயலாளர் பதிலளித்தார்.

(அ)

# மக்களுக்கான சேவையை சிறப்பாக செய்தால் அவர்கள் மனதில் நிச்சயமாக இடம்பிடிப்பீர்கள்!

## முகாமைத்துவ உத்தியோகத்தர் நியமனம் வழங்கும் நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர்

யாழ்ப்பாணம், பெப். 14

மக்களுக்கான சேவையை நீங்கள் சிறப்பாகச் செய்தால் அவர்கள் மனதில் நீங்கள் நிச்சயம் இடம்பிடிப்பீர்கள். அவர்கள்தான் உங்களை மதிப்பிடுபவர்கள் - கண்காணிப்பவர்கள். உங்களிடம் வந்தால் சேவையை திருப்தியுடன் பெற்றுக் கொள்ளலாம் என்ற எண்ணம் மக்களிடம் உருவாகும் வகையில் உங்கள் சேவை அமையும் என நான் நம்புகின்றேன் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைக்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட 114 பேருக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு, நேற்று முன் தினம் வியாழக்கிழமை காலை வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.



ஆளுநர் தனது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:

கடந்த காலங்களை நாம் சற்றுத் திரும்பிப் பார்க்க வேண்டும். வாக்கு வங்கிகளை நிரப்புவதற்காக, "ஆட்களுக்கு வேலை" என்ற அடிப்படையில், கண்மண் தெரியாமல் நியமனங்கள் வழங்கப்பட்ட ஒரு காலம் இருந்தது. தேவை இருக்கிறதோ இல்லையோ, அரசியல் காரணங்களுக்காக அரசதுறை வீங்க வைக்கப்பட்டது.

ஆனால், இன்று காலம் மாறியிருக்கிறது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையிலான தற்போதைய அரசாங்கம், "வேலைக்கு ஆட்கள்" என்ற புதிய, நேர்மையான கொள்கையை முன்னெடுத்து வருகின்றது. அதாவது, எங்கு தேவை இருக்கிறதோ, அங்கு மட்டுமே தகுதியானவர்கள் நிரப்பப்படுகிறார்கள்.

கடந்த ஆண்டில் நாம் பல பிரயத்தனங்களுக்கு மத்தியில் அனுமதியைப் பெற்றுப் பல ஆட்சேர்ப்புக்களை நடத்தியிருந்தோம். ஆனால், கவலைக்குரிய விடயம் என்னவென்றால், யாழ்ப்பாணத்தைத் தவிர்த்து வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்ட பலர், அந்தப் பொறுப்பை ஏற்க மறுத்து வேலையை விட்டுச் சென்றுவிட்டனர். இது மிகவும் தவறான ஒரு செயற்பாடு.

மக்களுக்கு எங்கு தேவைப்பாடு இருக்கின்றதோ, அங்கு சென்றுதான் நீங்கள் பணியாற்ற வேண்டும். "மக்களுக்காகத்தான் உங்கள் பணியே தவிர, உங்கள் பணிக்காக மக்கள் இல்லை" என்பதை ஆணித்தரமாகப் புரிந்துகொள்ளுங்கள்.

"அரச வேலை கிடைத்துவிட்டது, இனி வாழ்நாள் முழுவதும் ஓய்வாக இருக்கலாம், இறுதியில் ஓய்வூதியம் எடுக்கலாம்" என்ற மனநிலையுடன் யாராவது இங்கு வந்திருந்தால், அந்த எண்ணத்தை இப்போதே அழித்துவிடுங்கள். இது ஓய்வெடுப்பதற்கான இடமல்ல. இது ஓயாது உழைப்பதற்கான களம்.

நீங்கள் அமரப்போகும் கதிரைக்கு எதிரே, ஒரு சேவையைப் பெற்றுக்கொள்ள வரும் பொதுமகன் அமரும்போது, "அந்தக் கதிரையில் இருப்பது நான்தான்" என்று ஒரு கணம் நினைத்துப் பாருங்கள். ஒரு வேலை தாமதமானால், அல்லது நியாயமான ஒரு சேவை மறுக்கப்பட்டால், உங்களுக்கு எவ்வளவு வலிக்குமோ, அதே வலிதான் உங்களை நாடி வரும் அந்த ஏழைக்கும் இருக்கும். அந்தத் தாமதத்தை, அந்த வலியை ஒருபோதும் நீங்கள் கொடுக்காதீர்கள்.

உங்களை நாடி வரும் ஏழைக்கு நீங்கள் வழங்கும் தரமான - விரைவான சேவையால் அந்த முகத்தில் புன்சிரிப்பு வருமானால் அதுவே உச்சமானது. உங்கள் சிறப்பான சேவையால், "இந்த அலுவலர் எனக்கு வேண்டும்" எனத் திணைக்களத் தலைவர்கள் உங்களை விரும்பிக் கேட்கும் ஒருவராக நீங்கள் இருக்க வேண்டும் - என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Eelanadu ஈழநாடு
14.02.2026 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், மாசி 02

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## பயன்தராத பயணங்கள்

இனப்பிரச்னைக்கு தீர்வாக கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பின் பதின் மூன்றாவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் - முழுமையாக இல்லாவிட்டாலும் பகுதியளவிலாவது அதனை செய்வதற்கு நாங்கள் ஏன் முன்வருவதில்லை - மாதாந்த சஞ்சிகை போன்று அரசியல் யாப்பு தொடர்பில் பேசிக்கொண்டிருக்கின்றோம் - இருக்கிறதை விட்டு விட்டு வேறு ஒன்றைத் தேடுகின்றோம் - மீண்டும் நாங்கள் பயன்தராத ஒரு பயணத்தில் காலடி எடுத்து வைக்கின்றோம் - இவ்வாறு முன்னாள் அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்திருக்கின்றார்.

அமுனுகம தெரிப்பது சரியானதுதான். ஆனால் மைத்திரிபால சிறிசேன காலத்தில் இவ்வாறான பயன் தராத பயணத்தை முன்னெடுத்தபோது, அவர் அமைதியாகவே இருந்தார். இதுதான் இலங்கைத் தீவிலுள்ள அரசியல் சிக்கல் நிலைமை - இரண்டு பக்கத்திலும் பயன்தராத விடயங்கள் பற்றியே பேசி - இறுதியில் காலத்தை வீணாகப் போக்குவதே இதுவரையான அனுபவமாக இருக்கின்றது. ஆனால் இவ்வாறான பயன் தராத பயணங்களால் இறுதியில் மேலும் மோசமான நிலையை நோக்கிச் சென்று கொண்டிருப்பது என்னவோ ஏழைத் தமிழ் மக்கள் மட்டும்தான் - வசதியுள்ள ஒரு தமிழ் தலைமுறை ஏற்கனவே நாட்டை விட்டு வெளியேறிவிட்டது - இன்னும் வெளியேறும் தாகத்தோடு காத்திருக்கின்றது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் நூல் வெளியிட்டின்போதே அவர் இதனை தெரிவித்திருக்கின்றார். இனி அவர்களுக்கு அரசியல் எதிர்காலம் இல்லை என்னும் நிலையில் தங்களுடைய அனுபவங்களை நூலாக எழுதிக் கொண்டிருக்கின்றனர். ஜி.எல்.பீரிஸ் இப்போது மனித உரிமைகள் பற்றியும் சிறுபான்மை மக்கள் பற்றியெல்லாம் பேசகின்றார். ஆனால் அதிகாரத்தில் இருந்தபோது, மகிந்த ராஜபக்ஷவுக்கு முண்டுகொடுக்கும் பணியையே செய்து கொண்டிருந்தார்.

மகிந்த ராஜபக்ஷ காலத்தில் அரசியலமைப்பில் உள்ளவற்றை அமுல்படுத்துவதிலிருந்து முன்னோக்கிப் பயணிக்கக் கூடிய வாய்ப்பு இருந்தது - ஒரு வேளை சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகல் கனவில் இருந்திருந்தால் - அவர்களை புறம்தள்ளிவிட்டு சரியானதைச் செய்திருக்க முடியும். அவ்வாறான அறிவுரைகளை வழங்குவதுதான் பீரிஸ் போன்ற சட்ட அறிவுஜீவிகளின் பணியாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. அதிகாரத்தில் இருந்தவரைக்கும் அதனை ரசித்து அனுபவித்துவிட்டு, அரசியல் வாழ்வு முடிந்திருக்கும் நிலையில் சுடலை ஞான அரசியல் கதைகளை கூறுவதால் எந்த பயனும் இல்லை.

ஆனால் பயனற்ற பயணங்களை செய்வதில் ஒரு பயனுமில்லை என்று அமுனுகம கூறுவது முற்றிலும் சரியானதுதான். ஆனால் இதனை தமிழர் தரப்பில் கூறக்கூடிய அரசியலாளர்கள் இல்லை என்பதுதான் கவலைக்குரியது. தமிழ்ச் சூழலில் ஒரு விடயத்தை கூறிவிட்டு உடனேயே அதற்கு அடுத்த கட்டம் பற்றியும் கூறுகின்றனர். இது அடிப்படையிலேயே தவறான அரசியல் அணுகுமுறையாகும். சமஷ்டி பெயர்ப் பலகையில் முக்கியமல்ல என்று கூறுவதன் ஊடாக உள்ளடக்கத்தில் இருக்கும் என்றவாறு நம்பிக்கையை விதைப்பதும் யதார்த்தத்திற்கு முரணானதுதான். பெயரிலும் இருக்கப் போவதில்லை உள்ளடக்கத்திலும் இருக்கப் போவதில்லை என்பதுதான் உண்மை. இதனை துணிவாகவும் நேர்மையாகவும் முன்வைத்து, அடுத்த கட்டத்தை நோக்கி பயணிக்கும் அரசியல் பற்றி பேசும் ஆற்றல் இருந்தால் மட்டும்தான் அரசியலை முன்னெடுக்க முடியும்.

# அரகலயவின் மூலம் ஆட்சிக்கு வந்தவர்கள் கறுப்புக்கொடி ஏற்றுவதை தவறு என்பதா?

### சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி



யாழ்ப்பாணம், பெப். 14

பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்ட கறுப்புக் கொடி போராட்டத்தை சட்டவிரோதமானது என அறிவித்துள்ள பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுயின் நிலைப்பாடு தவறானது என ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தெரிவித்துள்ளது.

அக்கட்சியின் பேச்சாளர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கறுப்புக்கொடி ஏற்றுதல் என்பது துக்கத்தையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்தும் ஜனநாயக உரிமை என வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் வரலாற்று காரணங்களால் சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினத்தை ஏற்றுக்கொள்ளாமல் நீண்ட காலமாக கறுப்புக்கொடி போராட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும், அதனை சட்டவிரோதம் என கூறுவது ஜனநாயக விரோதமான செயலாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்கள் அமைதியான முறையில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ள நிலையில், அவர்களுக்கு எதிராக விசாரணை நடத்தி தண்டனை வழங்க முயற்சிப்பது அடிப்படை உரிமைகளுக்கு எதிரானதாகும் என கூட்டணி தெரிவித்துள்ளது.

அரசு போராட்டங்களின் காரணங்களை ஆராய்ந்து தீர்வு காண வேண்டும் என்றும், ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்தும் மாணவர்களை அச்சுறுத்தாமல் கல்வி தொடரச் சூழல் அமைக்கப்பட வேண்டும் என்றும் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், அரகலய போராட்டத்தின் மூலம் ஆட்சிக்கு வந்தவர்கள், தமிழ் மாணவர்களின் ஜனநாயகப் போராட்டங்களை ஒடுக்குவது பொருத்தமானதா என்பதை சிந்திக்க வேண்டும் என்றும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. (அ)

# கெஹலியவுக்கு எதிரான வழக்கு ஏப்ரல் 27ஆம் திகதி விசாரணைக்கு

கொழும்பு, பெப். 14

முறையற்ற வகையில் சொத்துகளை ஈட்டிய குற்றச்சாட்டு தொடர்பில் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் அவரின் குடும்பத்தினருக்கு எதிராக இலஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை எதிர்வரும் ஏப்ரல் 27 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மொஹமட் மிஹால் முன்னிலையில் நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது இலஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி காஞ்சன ரத்வத்த ஆகியோர் முன்வைத்த விடயங்களை ஆராய்ந்த நீதிபதி வழக்கை ஏப்ரல் 27 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கத் தீர்மானித்தார்.

அன்றைய தினம் சாட்சியாளர்களை நீதிமன்றத்தில் முற்படுமாறு அறிவித்து அவர்களுக்கு அழைப்பாணை விடுக்கவும் நீதிபதி உத்தரவிட்டார்.

2020 ஒகஸ்ட் 13ஆம் திகதி முதல் 2024 ஜூன் 24 ஆம் திகதி வரையான காலப்பகுதியில், கெஹலிய ரம்புக்வெல ஊடகம், சுகாதார, சுற்றாடல் அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில் முறையற்ற வகையில் சொத்துகளை ஈட்டியனாரென நிதி தூய்தாக்கல் தடுப்பு சட்டத்தின் கீழ் குற்றமிழைத்துள்ளார் என்று இலஞ்சம் ஊழல் விசாரணை ஆணைக்குழு பிரதிவாதிகளுக்கு எதிராகத் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

# பளையில் ஆயுள்வேத வைத்தியசாலை திறப்பு!

கிளிநொச்சி, பெப். 14


பளை பிரதேசத்தில் அமைந்துள்ள காற்றாலை மின் உற்பத்தி நிலையம் வடக்கு மாகாண சபைக்கு வழங்கும் சமூக வலுவூட்டல் நன்கொடை நிதி 17 மில்லியன் ரூபாவும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை நிதி 12 மில்லியன் ரூபாவுமாக 29 மில்லியன் ரூபா செலவில் பளை நகரத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஆயுள்வேத வைத்தியசாலை நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தலைமையில் நடைபெற்றுள்ளது

பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ். சுதர்சன், கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ப.சத்தியராகவன், பளை புனித அந்திரேயா ஆலய பங்குத்தந்தை அருட்பணி கி.வரதராஜன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன் கலந்து கொண்டனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார். மனநிறைவு கிட்டும் நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் ஒருவரை மாற்றி ஒருவர் குறைக் கூறிக் கொண்டிருக்க வேண்டாம். அதிகாரி உங்களை புரிந்து கொள்ள மாட்டார்.

**மிதுனம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். மனைவி வழியில் மதிக்கப்படுவீர்கள். புது பொறுப்பை ஏற்பார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கடகம்**
உற்சாகமாக இருப்பீர்கள். பழைய உறவினர் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். அரசாங்க விஷயம் நல்ல விதத்தில் முடியும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும்.

**சிம்மம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துக் கொள்வீர்கள். பிரார்த்தனைகளை குடும்பத்தினருடன் நிறைவேற்றுவீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**கன்னி**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. மகளுக்கு நல்ல வரன் அமையும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும்.

**துலாம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். சொத்துப் பிரச்னைகளுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். தைரியம் கூடும் நாள்.

**விருட்சிகம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைசசல் நீங்கி மன அமைதி கிட்டும். குடும்பத்தில் நிம்மதி உண்டு. எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். மனம் தெளிவு பெறும் நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை உங்கள் மேற்பார்வையிலேயே முடிப்பது நல்லது. வியாபாரத்தில் புது முதலீடுகளை தவிர்க்கவும். மறைமுக அவமானம் வந்து நீங்கும்.

**மகரம்**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். சக ஊழியர்களால் பிரச்சினைகள் வரக்கூடும்.

**கும்பம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். பிள்ளைகள் பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். மதிப்புக் கூடும் நாள்.

**மீனம்**
உணர்ச்சிப் பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். மரியாதை கூடும்.

# யாழில் பழக்கடை விவகாரத்தால் குழப்பம் பிரேரணையை கிழித்தெறிந்த உறுப்பினர்

## மாநகர சபை அமர்வில் பரபரப்பு

யாழ்ப்பாணம், பெப். 14

பழக்கடை வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை உறுதி செய்யாது அசமந்தமாக செயல்பட்ட யாழ். மாநகர சபை முதல்வரது செயலைக் கண்டித்து, பிரேரணையை கிழித்தெறித்த ஈ.பி.டி.பியியின் உறுப்பினர்கள் சபை அமர்விலிருந்தும் வெளிநடப்பு செய்தனர்.


யாழ். மாநகர சபை உறுப்பினர் ப. தர்சானந்தால் பழக்கடைகளை அகற்றுவது தொடர்பில் கொண்டுவரப்பட்ட பிரேரணையை எதிர்த்து, யாழ். மத்திய பேருந்து நிலைய சூழலில் அமைந்துள்ள பழக்கடை வியாபாரிகள் மாநகர சபையை முற்றுகையிட்டு நேற்றுக்காலை போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இது குறித்து நேற்றைய சபை அமர்வில் கருத்தை முன்வைத்து உரிய பொறிமுறையின்றி கொண்டுவரப்பட்ட பிரேரணையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அவ்வாறு செயல்படுத்தும் சந்தர்ப்பத்தில் உரிய பொறிமுறை வேண்டும் என்றும் வலியுறுத்தியதுடன் அதற்கான தீர்வை உடன் வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

ஆனால், முதல்வர் இவ்விடயத்தை அலட்சியப்போக்குடன் கையாண்டு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் சபையை முன்னெடுத்தமையால் ஈ.பி.டி.பியின் உறுப்பினர்கள் குறித்த பிரேரணையை கிழித்தெறிந்து சபையை விட்டு வெளியேறினர்.

(எ)

# யாழ். மாநகர சபை முன்பு போராட்டம்






யாழ்ப்பாணம், பெப். 14

யாழ். நகரில் உள்ள பழக்கடைகளை அகற்றுவது தொடர்பில் கொண்டுவரப்பட்ட பிரேரணையை எதிர்த்து யாழ். மத்திய பேருந்து நிலையம் அருகில் பழக்கடை வைத்துள்ள வியாபாரிகள் மாநகர சபை முன்பு நேற்றுக்காலை போராட்டத்தில் ஈடு பட்டனர்.

# காணியற்ற குடும்பங்களுக்கு அடுக்கு மாடி வீட்டுத் திட்டம்

## யாழில் அதிகாரிகள் ஆய்வு



யாழ்ப்பாணம், பெப். 14

யாழில் காணியற்ற குடும்பங்களுக்கு அடுக்கு மாடி வீட்டுத் திட்டம் அமைப்பதற்கான பொருத்தமான காணியை தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வீடமைப்பு நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் செயலாளர் எல். குமுடு லால் பொகவற்ற யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனை நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலில் காணியற்ற குடும்பங்களுக்கு அடுக்கு மாடி வீட்டுத் திட்டம் அமைப்பதற்கான பொருத்தமான காணியை அடையாளப்படுத்தல் தொடர்பில் அரசாங்க அதிபருடன் விரிவாக கலந்துரையாடினார்.

இதன்போது, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க. சிவகரன் மற்றும் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பா. ஜெயகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

மேலும், இந்தக் கலந்துரையாடலின் பின்னர் அமைச்சின் செயலாளருடன், அரசாங்க அதிபர் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) ஆகியோர் களவிஜயம் செய்து காணிகளை ஆய்வு செய்தனர்.

(எ)

# கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு காரியாலயங்கள்

## அமைச்சர் சுசில் ரணசிங்க தகவல்

கிளிநொச்சி, பெப். 14

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிரத்தியேக காரியாலயங்களை அமைப்பது தொடர்பில் பரிசீலிக்கப்படும் என்று வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்தார்.

கிளிநொச்சிக்கு பயணம் மேற்கொண்ட அமைச்சர், மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

“கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 12 ஆயிரம் நீர் இணைப்புகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட நீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. நாளாந்தம் நீர் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு 66 கிலோ மீற்றரும் முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு 114 கிலோ மீற்றரும் பயணித்தே தங்களது தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டின் ஏனைய மாவட்டங்களில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிராந்திய காரியாலயம் தனித்தனியான மாவட்ட ரீதியாக உண்டு.

ஆனால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் மாத்திரமே இப்பொழுதும் யாழ்ப்பாணம் பிராந்திய காரியாலயத்துடன் இணைக்கப்பட்ட மாவட்டங்களாக காணப்படுகின்றன. இது மக்களுக்கு வினைத்திறனான விரைவான சேவையை வழங்குவதில் நெருக்கடியை ஏற்படுத்துகின்றன.

எனவே கிளிநொச்சி, முல்லைத்தீவில் காரியாலயங்கள் அமைக்கப்படவுள்ளன”- என்றார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் தொழிலாளர் முறைமையை ஒழிக்க கல்வி சீர்திருத்தம் அவசியம்!

## தொழில் பிரதி அமைச்சர் மகிந்த

கொழும்பு, பெப். 14

சிறுவர் தொழிலாளர் முறைமையை இல்லாதொழிப்பதற்கு கல்வி சீர்திருத்தம் அவசியமென தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

மொரோக்கோவில் நடைபெறும் 6ஆவது சிறுவர் தொழிலாளர் ஒழிப்பு உலகளாவிய மாநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இதற்கமையவே தற்போதைய அரசாங்கம் புதிய கல்வி சீர்திருத்தங்களை முன்னெடுத்து வருவதாக சுட்டிக்காட்டிய அவர், இலங்கையில் ஆண்டுதோறும் 10 இற்கும் குறைந்த சிறுவர் தொழிலாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

சிறுவர் தொழிலாளர் முறைமையை இல்லாதொழிப்பதற்காக, வீட்டு வருமானம் மற்றும் சமூக பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், கல்வி மற்றும் திறன் மேம்பாட்டில் முதலீடு செய்தல் மற்றும் தரமான கல்விக்கான அணுகலை உறுதி செய்தல் குறித்தும் அவதானம் செலுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

# ஏழு பல்கலைக்கழகங்களில் விடுதிகளை நிர்மாணிக்க திட்டம்

கொழும்பு, பெப். 14

நாட்டிலுள்ள ஏழு பல்கலைக் கழகங்களில் புதிய விடுதி வசதிகளை நிர்மாணிப்பதற்கான திட்டங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள் தங்குமிடத்துக்கு பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். இதனைக் கருத்தில் கொண்டே இந்தப் புதிய விடுதிகள் அமைக்கப்படவுள்ளன.

இதன் மூலம், குறைந்தது 2,400 மாணவர்கள் தங்குமிட வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கல்வி அமைச்சின் நேரடி மேற்பார்வையின் கீழ் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தற்போது பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், புதிய விடுதி வசதிகள் மாணவர்களின் தங்குமிடப் பிரச்னைகளுக்குப் பெரும் தீர்வாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பாடசாலைகளுக்கு நேற்றுடன் விடுமுறை

கொழும்பு, பெப். 14

அனைத்து அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் 2026 ம் ஆண்டுக்கான முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம் நேற்று வெள்ளிக்கிழமையுடன் நிறைவடைந்ததாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, முதலாம் தவணையின் மூன்றாம் கட்டப் பணிகள் எதிர்வரும் மார்ச் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மீண்டும் ஆரம்பமாகவுள்ளன.

இதேவேளை, 2025 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி வியாழக்கிழமை நிறைவடையும் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# அதிக வரி வீதம் ஆடை ஏற்றுமதியை பெரும் பின்னடைவுக்கு உள்ளாக்கும்!

கொழும்பு, பெப். 14

அமெரிக்காவுக்கான ஆடை ஏற்றுமதியில் பிராந்தியத்திலேயே மிக அதிக வரி விகிதத்தை இலங்கை அரசாங்கம் பேணி வருகிறது. இது இலங்கையின் ஆடைத் தொழில்துறையை பெரும்பின்னடைவுக்கு உள்ளாக் கும் என்று எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள அவர், அமெரிக்காவுக்கான ஏற்றுமதி வரி குறைப்பை பங்களாதேஷ் 19 சதவீதமாகவும் இந்தியா 18 சதவீதமாகவும் பெற்றுள்ள நிலையில் இலங்கை மாத்திரம் எந்தவித சலுகைகளுமின்றி இன்னும் 20 சதவீத வரி விகிதத்திலேயே நீடிப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

"அமெரிக்காவுக்கான நமது ஏற்றுமதியில் 70 சதவீதம் ஆடைகளாக இருக்கும் நிலையில், இந்த 20 சதவீத வரி விகிதமானது ஏனைய நாடுகளின் உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் இலங்கைத் தயாரிப்புகளின் போட்டித்தன்மையை கணிசமாகக் குறைக்கும்.

"பிராந்தியத்திலேயே மிக உயர்ந்த வரி விகிதத்தைக் கொண்டிருப்பதன் விளைவுகளை அரசாங்கம் உணராமல் இருக்கிறது. ஆடைத் துறைக்கான சலுகைகளையும் பெற்றுக்கொள்ள அரசாங்கம் தவறிவிட்டது" - என்றும் அவர் சாடினார்.

# நகைகளை கடனாக பெற்று மோசடி செய்த ஆசிரியர் கைது

கொழும்பு, பெப். 14

தனது கல்வி நிலையத்துக்கு வரும் மாணவர்களின் பெற்றோரிடம் நகைகளை கடனாக வாங்கி மோசடி செய்த குற்றச்சாட்டில் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்கள் அளித்த முறைப்பாடுகளின் அடிப்படையில், சந்தேகநபர் நேற்றுமுன்தினம் களுத்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட ஆசிரியர் களுத்துறை - அளுத்கமை பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடையவராவார்.

சந்தேகநபர் தனது மாணவர்களின் பெற்றோரிடம் 59 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளை ஒரு மாத தவணையில் பெற்று மோசடி செய்துள்ளார் என்று கூறப்படுகிறது. மேலதிக விசாரணைகளை களுத்துறை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# வெளிநாட்டு பெண்கள் கைது

கொழும்பு, பெப். 14

பொலிஸாரின் சுற்றிவளைப்பில் வெளிநாட்டு பெண்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

மசாஜ் நிலையம் என்ற போர்வையில் விபசாரத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டிலேயே கொழும்பு - வெள்ளவத்தையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதான இருவரும் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த 36, 41 வயது பெண்கள் என்று அறிய வருகிறது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெள்ளவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐஸ் போதைப்பொருளுடன் 3 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, பெப். 14

ஐஸ் போதைப்பொருளுடன் மூன்று சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு - களனி பிரதேச குற்றப்புலனாய்வு பணியகத்தினரால், மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது, சந்தேகநபர் ஒருவரிடமிருந்து 700 கிராம் ஐஸ் போதைப்பொருள், 2 கைபேசிகள், போதைப்பொருள் விற்பனை மூலம் பெறப்பட்ட 26 ஆயிரம் ரூபாய் பணம் கைப்பற்றப்பட்டன.

இதேநேரம், 10 கிராம் 150 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவரும், 10 கிராம் 150 மில்லிகிராம் போதைப்பொருளுடன் மற்றொரு சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான சந்தேக நபர்கள் கொஸ்கம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் 23, 30, 32 வயதுடையவர்களாவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுவரெலியா உட்பட பெருந்தோட்ட பகுதிகளில்

# சிறுவர் பாதுகாப்புக்காக விசேட செயல்திட்டங்கள்

கொழும்பு, பெப். 14

நுவரெலியா உட்பட பெருந்தோட்டப் பகுதிகளில் சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் பெருந்தோட்டத் தொழிலாளர் வீடமைப்பு, சமூக அபிவிருத்தி அறக்கட்டளை என்பன இணைந்து இந்த ஆண்டில் (2026) விசேட செயல்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளன.

நாட்டின் 12 மாவட்டங்களை மையப்படுத்தி இந்த விசேட செயல்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளன.

பெருந்தோட்டப் பகுதி மாணவர்களின் நலன் கருதி குறுகிய கால மற்றும் நீண்ட கால இலக்குகளை தீர்மானித்து, அதிகாரசபை இயங்கி வருவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகங்களை அடையாளம் காணுதல், அத்தகைய சம்பவங்களை குறைத்தல் மற்றும் குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் போன்றன இந்தத் திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும்.

சிறுவர் பாதுகாப்பு தொடர்பான முறைப்பாடுகள் அதிகமாக பதிவாகும் மாவட்டங்களை கருத்தில் கொண்டு இந்த 12 மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதில் இரத்தினபுரி, கேகாலை, நுவரெலியா, மொனராகலை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்கள் முதன்மையானவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மின்சாரம் தாக்கி யானை மரணம்!

## ஒருவர் கைது

மட்டக்களப்பு, பெப். 14

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திக்கோடை பகுதியில் காட்டு யானை ஒன்று உயிரிழந்தது.

திக்கோடை புதிய வீட்டுத் திட்டப்பகுதிக்கு அருகாமையில் நேற்று முன்தினம் இரவு உணவு தேடி வந்த யானையே மின்சாரம் தாக்கி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

விளைநிலங்களை பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கியே யானை உயிரிழந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தகவல் அறிந்த வெல்லாவெளி பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதனடிப்படையில், மின்சார வேலி அமைக்கப்பட்டிருந்த காணியின் உரிமையாளரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் மேலதிக விசாரணைகளின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (எ)

# கிழக்கு மாகாணத்தில் கனமழை பெய்யக்கூடும்

## கடல் பகுதிகளில் பலத்த காற்று

கொழும்பு, பெப். 14

கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் அத்துடன் பொலநறுவை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அடிக்கடி மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஊவா மாகாணத்தின் சில இடங்களிலும் அத்துடன் அம்பாறை, மட்டக்களப்பு, மாத்தளை, நுவரெலியா மற்றும் பொலநறுவை மாவட்டங்களின் சில இடங்களிலும் 50 மில்லி மீற்றரிலும் கூடிய ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும். வட மாகாணத்திலும் அத்துடன் அநுராதபுரம் மாவட்டத்திலும் இடைக்கிடையே மழை பெய்யக்கூடும்.

நாட்டின் ஏனைய பிராந்தியங்களின் பல இடங்களில் பிற்பகல் இரண்டு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

சப்ரகமுவ மாகாணத்தின் சில இடங்களிலும் அத்துடன் காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களின் சில இடங்களிலும் 50 மில்லி மீற்றரிலும் கூடிய ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அதிகாலை வேளையில் பனி மூட்டம் காணப்படும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அம்பாந்தோட்டை தொடக்கம் பொத்துவில் ஊடாக திருகோணமலை வரையான கடல் பிராந்தியங்களில் அடிக்கடி மழை பெய்யக்கூடும்.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 30 - 40 கிலோ மீற்றர் வேகத்தில் வட கிழக்குத் திசையில் இருந்து காற்று வீசும்.

களுத்துறை தொடக்கம் புத்தளம், மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான அத்துடன் அம்பாந்தோட்டை தொடக்கம் பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 45 - 50 கிலோ மீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக் கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் ஓரளவு கொந்தளிப்பாக காணப்படும்.

ஆனால், இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுவதுடன் அவ்வேளைகளில் கடல் பிராந்தியங்கள் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் அபிவிருத்தித்திட்ட முன்னேற்ற கூட்டம்



திருகோணமலை, பெப். 14

கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் துறைசார்ந்த மற்றும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்ற மதிப்பாய்வுக் கூட்டம் அமைச்சின் செயலாளர் எம். அஸ்மி தலைமையில் திருகோணமலை விவசாய அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர பங்கேற்புடன் நடைபெற்ற அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மதிப்பாய்வுக் கூட்டத்தில் அமைச்சும், அமைச்சுடன் இணைந்த 6 நிறுவனங்களின் முன்னேற்ற நிலை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதில் காணி நிர்வாகத் திணைக்களம், விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தி திணைக்களம், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு மற்றும் மீன்பிடி பிரிவு போன்ற திணைக்களங்களின் கிழக்கு மாகாண பணிப்பாளர்கள் மற்றும் ஆணையாளர்கள் பங்கேற்று குறித்த விடயம் தொடர்பில் விளக்கங்களை வழங்கினர். (எ)

# காட்டு யானை தாக்கி வயோதிய பெண் பலி!

## மூவர் படுகாயம்

மட்டக்களப்பு, பெப். 14

மட்டக்களப்பில் வாழைச்சேனை நகரிலும் கிராமத்துக்குள்ளும் இரண்டு காட்டு யானைகள் நேற்று அதிகாலை 6 மணியளவில் ஊடுருவின.

இதில், வாழைச்சேனை நகரில் ஊடுருவிய காட்டு யானை, இடியப்பம் விற்றுக்கொண்டு வந்த 68 வயது மூதாட்டியை தாக்கியதில் அவர் உயிரிழந்தார்.

இதேவேளை, கிராமத்துக்குள் நுழைந்த இரண்டு காட்டு யானைகள் தாக்கியதில் மூவர் படுகாயமடைந்தனர்.

இவ்வாறு, படுகாயமடைந்தவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வனவிலங்கு பாதுகாப்பு துறை அதிகாரிகள் மற்றும் பொலிஸார் குறித்த காட்டு யானைகளை காட்டுக்குள் விரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# நுவரெலியா, கண்டியில் மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, பெப். 14

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நுவரெலியா, கண்டி மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கையானது நேற்று வெள்ளிக்கிழமை காலை 06. 00 மணி முதல் இன்று சனிக்கிழமை காலை 06. 00 மணி வரை அமுலில் இருக்கும் என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நுவரெலியா மாவட்டத்தின் வலப்பனை மற்றும் நில்தண்டாஹின்ன ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளுக்கும் கண்டி மாவட்டத்தின் பாதஹேவாஹெட்ட பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

# சிறுவர் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு கருத்தரங்கு


கல்முனை, பெப்.14

அம்பாறை- சாய்ந்தமருது லீடர் அஷ்ரப் வித்தியாலயத்தின் 2026ஆம் ஆண்டுக்கான சிறுவர் பாதுகாப்பு குழு மீளமைப்பும் அங்குரார்ப்பண நிகழ்வும் பாடசாலை கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம். ஐ. சம்சுதீனின் வழிகாட்டலில், பிரதி அதிபர் ஆர். ஹாதிம் தலைமையில் நடைபெற்ற இந்த கருத்தரங்கில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். பாடசாலையின் ஒழுக்கம் மற்றும் வழிகாட்டல் ஆலோசனை பொறுப்பாசிரியர் எம். றிபாஸ் நிகழ்வை முழுமையாக நெறிப்படுத்தினார்.

கருத்தரங்கில் உரையாற்றிய பிரதி அதிபர், தற்போதைய சவால்கள் நிறைந்த சமூக சூழலில் மாணவர்களின் பாதுகாப்பையும் ஒழுக்கத்தையும் பேணுவதில் சிறுவர் பாதுகாப்பு குழுவின் முக்கியத்துவத்தை விளக்கினார். மாணவர்கள் தங்கள் உரிமைகள் மற்றும் பொறுப்புகளை உணர்ந்து செயல்பட வேண்டிய அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். (எ-06)

# களுவாஞ்சிக்குடி நகர் பகுதியில் கட்டாக்காலி மாடுகள் அதிகரிப்பு



மட்டக்களப்பு, பெப். 14

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்துக்குட்பட்ட பிரதான வீதிகளில் பகலிலும் இரவு வேளைகளிலும் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் தொடர்ந்து அதிகரித்து வருவ தாக வியாபாரிகளும் பயணிக ளும் கவலை வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறு கட்டாக்காலி மாடுகள் வீதிகளில் குறுக்கீடு செய்து திரிவதனால் வீதி விபத்துகள் அதிகரிப்பதோடு, வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போதும் கடைகளுக்குள்ளும் ஏனைய வர்த்தக நிலையங்களுக்குள்ளும் புகுந்து திரிவதாக அப்பகுதி வர்த்தகர்கள் கூறினர்.

களுவாஞ்சிக்குடி பிரதான சந்தியில் தற்போது போக்குவரத்து சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டு படிப்படியாக அபிவிருத்தி அடைந்து வருகின்ற நிலையில், அதிக சனநடமாட்டமுள்ள பிரதான வீதி, பொதுச் சந்தை தொகுதி, பட்டிருப்பு சந்தி, மருத்துவமனை வீதி, உள்ளிட்ட பல இடங்களிலும் இவ்வாறு கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளன. (எ-06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோத...

தொழிலை தடை செய், சட்டவிரோத தொழில் நடவடிக்கைக்கு எதிராக அநுர அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை பின்வாங்காதே என பல கோசங்களை எழுப்பியவாறு நடைபவனியாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தை வந்தடைந்தனர்.

அங்கு தமது கோரிக்கைகள் உள்ளடங்கிய மகஜரை மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரனிடம் அவர்கள் கையளித்தனர்.

தொடர்ந்து அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் கருத்து தெரிவிக்கையில்-

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 20 வீதமானவர்கள் மீன்பிடித்துறையில் ஈடுபட்டுள்ளனர். மீன்வளம் சட்டவிரோத முறையில் அழிக்கப்படுகிறது. தற்போதய அரசாங்கத்தின் கொள்கை இயன்றவறை சட்டவிரோத செயற்பாடுகளை நிறுத்துவதாகும்.

எமது மாவட்டத்தில் மீன்பிடித்துறை பிரச்னையிலும் பார்க்க அதிகமாக இருந்த போதைப்பொருள் பிரச்னை தற்போது ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. போராட்டக்காரர்களின் கோரிக்கையை நாம் அரசாங்கத்துக்கு அனுப்புவோம். அரசாங்கத்தின் செயற்பாடுகள் மீனவர்களுக்கு சாதகமாக இருக்கும் என நம்பிக்கை உள்ளது-என்றார். (அ)

## ஏக்கிய...

கடந்த 2015-2019 காலப்பகுதியில் பதவி வகித்த அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட ஏக்கிய இராஜ்ய (ஒற்றையாட்சி அரசு) அரசியல் யாப்பு வரைபை நாட்டுக்கான புதிய அரசியல் யாப்பாக கொண்டு வந்து நிறைவேற்றுவோம் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தார்.

அதன் பின்னரும் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட நாட்டின் உயர் தலைவர்கள் பல முக்கிய சந்தர்ப்பங்களில் குறித்த அரசியல் யாப்பை நிறைவேற்றும் செயற்பாடுகள் முன்னோக்கிச் சென்றுகொண்டிருப்பதாக உறுதிப்படுத்தியுள்ளனர்.

அதனைச் செயல்படுத்துவதற்கான கலந்துரையாடல்களும் பல கட்டங்களாக இடம்பெற்று வருகின்றன. தமிழர்கள் தேர்தல்களில் வழங்கிய அரசியல் ஆணைக்கு முரணாக கொண்டுவரப்படவுள்ள ஏக்கிய இராஜ்ய யாப்பு வரைவை நிராகரித்து அதற்குப் பதிலாக, தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட, தமிழ்த் தேசத்தின் தனித்துவமான இறைமையின் அடிப்படையில், சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கக்கூடிய கூட்டாட்சி(சமஷ்டி) அரசியல் யாப்பு உருவாக்கப்படுவதையும் உறுதிப்படுத்தும் நோக்கில், சிறீலங்கா அரசின் மீது உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டங்களில் அழுத்தங்களை ஏற்படுத்தவேண்டியது மிகவும் அவசியமாகியுள்ளது.

இது தொடர்பாக அரசியல் தரப்புகளும் சிவில் சமூக அமைப்புகளும் இணைந்து பொது இணக்கப்பாட்டுக்கு வருதல் அவசியமாகியுள்ளது. இம்முக்கிய முயற்சியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பங்களிப்பு இன்றியமையதது எனக் கருதுகின்றோம்.

எனவே இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டு பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு தங்களது ஒத்துழைப்பைக் கோருவதுடன், பெறுமதிமிக்க பங்களிப்பை வழங்குமாறும் மேலும் தங்களது அமைப்பிலிருந்து இம்முயற்சிக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கக்கூடிய உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம் - என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆயினும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கடிதத்துக்கு பதில் அனுப்பியுள்ள தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், இக்கடிதத்தின் இரண்டாம் பந்தியின் கருத்துக்களின் அடிப்படையில் நாளை (15.02.2026) நடைபெறவுள்ள கூட்டத்தில் பங்கேற்பது சாத்தியமற்றது. எனினும் ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறைமையை முழுமையாக எதிர்ப்பதுவும் எமது கட்சியின் அடிப்படைக் கோட்பாடான சமஷ்டி கூட்டாட்சி முறைமையை வலியுறுத்துவதிலும் நாங்கள் உறுதியாக உள்ளோம் - எனக் குறிப்பிட்டுள்ளார். (அ)

## ஜனநாயக...

ந.சிறீகாந்தா (தமிழ்த் தேசியக் கட்சி) மற்றும் சி.வேந்தன் (ஜனநாயகப் போராளிகள் கட்சி) உள்ளிட்ட முக்கிய அரசியல் பிரமுகர்கள் மற்றும் கூட்டணியின் சார்பில் வடக்கு மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் வெற்றி பெற்ற பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பல தரப்பினர் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)

## சர்வதேச...

தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பயங்கரவாதம் என்பது இன்று உலகளாவிய ரீதியில் புதிய வடிவங்களை எடுத்துள்ளது. காலாவதியான சட்டங்களைக் கொண்டு தற்கால சவால்களை எதிர்கொள்ள முடியாது. "பயங்கரவாதம்" குறித்த விரிவான வரைவிலக்கணம் என்பது குற்றவாளிகள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிப்பதைத் தடுப்பதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளது. இது சாதாரண பொதுமக்களை எவ்விதத்திலும் பாதிக்காது.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் போது, உடனடி முடிவுகளை எடுக்க வேண்டிய பொறுப்பு நாட்டின் தலைவருக்கு உண்டு. தடை செய்யப்பட்ட பகுதிகள் மற்றும் அமைப்புகள் குறித்த அறிவிப்புகள் புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும். இது தனிப்பட்ட விருப்பங்களுக்கு அப்பாற்பட்டது.

ஊடக சுதந்திரத்தை முடக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை. ஆனால், பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் நுழைந்து தகவல்களைச் சேகரிப்பது நாட்டின் பாதுகாப்பைச் சீர்குலைக்கக்கூடும். அத்தகைய தீவிரமான சந்தர்ப்பங்களில் மட்டுமே சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். பொறுப்புள்ள ஊடகத்துறைக்கு இந்தச் சட்டத்தால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், நவீன கால அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளவுமே இந்தப் புதிய சட்ட மூலம் கொண்டுவரப்படுகின்றது.

எதிர்க்கட்சியினர் கூறுவது போல் இது ஒரு மனிதாபிமானமற்ற சட்டம் அல்ல. சர்வதேச மனித உரிமைத் தரநிலைகளை உள்வாங்கியே இந்தப் புதிய வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. யாருக்கேனும் இதில் அதிருப்தி இருப்பின், அதனை பாராளுமன்ற விவாதங்களின் போதோ அல்லது நீதிமன்றத்தின் ஊடாகவோ அணுகுவதற்குப் பூரண சுதந்திரம் உள்ளது - என்றார். (அ)

## தமிழ்...

நாடு என்ற ரீதியில் ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாதென முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கை மன்றக்கல்லூரியில் வன்டெக்ஸ்ட் இன்னிஸியேட்வின் ஏற்பாட்டில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை நடைபெற்ற அவரது 'இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுப்பு: ஒரு உள்ளக பார்வை" எனும் நூல் பற்றி நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதாக குறிப்பிட்டுக் கொண்டு இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால் இன்றளவில் புதிய அரசியல் உருவாக்கத்துக்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை கூட முன்னெடுக்கவில்லை.குறைந்தபட்சம் ஒரு கருத்தாடல் கூட இடம்பெறவில்லை.

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது. அரசியலமைப்பு தொடர்பில் மக்களின் சிந்தனையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மக்கள் முற்போக்கான நிலைப்பாட்டில் உள்ளார்கள். ஆகவே புதிய யாப்புருவாக்கத்துக்கான நடவடிக்கைகளை அரசாங்கம் சிறந்த முறையில் வெளிப்படையாக முன்னெடுக்கலாம்.

இந்தியாவின் தலையீட்டுடன் தான் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் மற்றும் அதிகார பகிர்வு தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளில் இந்தியா விடுதலைப் புலிகள் அமைப்பை ஒரு பங்காளியாக கொள்ளவில்லை.

யுத்தம் முடிவடைந்தவுடன் அந்த மக்களின் அடிப்படை வாழ்வாதார பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும்.அதன் பின்னர் அரசியல் பிரச்னைக்கு தீர்வு காணலாம் என்று ஆரம்பத்தில் கருதப்பட்டது. ஆனால் அது தவறென்று பிற்பட்ட காலத்தில் உணரப்பட்டது.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைகளுக்குத் தீர்வு காணாமல் நாடு என்று ரீதியில் முன்னேற்றமடைய முடியாது. இந்த பிரச்னைக்கு அரசாங்கம் அரசியலமைப்பின் ஊடாக முரண்பாடற்ற வகையில் தீர்வு காண வேண்டும்-என்றார். (அ)

## அடக்குமுறையை...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிலக்கரி கொள்வனவு மற்றும் அரிசி மாபியா போன்ற விடயங்களில் பாரிய ஊழல்கள் இடம்பெற்றுள்ளன. முன்பு ஆலை உரிமையாளர்களிடம் இருந்த அரிசி மாபியா, தற்போது வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யும் பெரும் வர்த்தகர்களிடம் சிக்கியுள்ளது. கடந்த காலங்களில் இடம்பெற்ற மக்கள் போராட்டங்கள் குறித்துப் பேசுகையில், இளைஞர்கள் சில அரசியல் குழுக்களால் தவறாக வழிநடத்தப்பட்டனர். போராட்டத்தை முன்னின்று நடத்திய சிலர் இன்று வாகனங்கள், வீடுகள் எனச் சொத்துக்களைச் சேர்த்துக்கொண்டு வெளிநாடுகளில் குடியேறியுள்ளனர். ஆனால், அவர்களை நம்பி வீதிக்கு இறங்கிய அப்பாவி இளைஞர்கள் இன்று தண்டனைகளை அனுபவித்து வருகின்றனர். மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் அத்துக்கோரளவின் மரணம் தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பு, இலங்கையின் நீதித்துறை சுதந்திரமாகச் செயல்படுவதை உறுதிப்படுத்தியுள்ளது. எனினும், இவ்வாறான படுகொலைகளைச் சமூக ஊடகங்கள் வாயிலாக நியாயப்படுத்த முயற்சிக்கும் போக்கு ஆபத்தானது. அரசாங்க தபால் நிலையங்கள் நட்டத்தில் இயங்கினால், அதை இலாபகரமாக மாற்றுவதற்குப் பதிலாக முழுமையாக மூடுவது ஒரு பொறுப்புள்ள அரசாங்கத்தின் செயல் அல்ல. ஊடகங்கள் வாயிலாக அச்சுறுத்தல்களை விடுத்து ஒரு துறையை நிர்வகிக்க முடியாது. இது அத்துறையில் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் பொதுமக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது-என்றார். (அ)

## திஸ்ஸ...

இல்லத்தில் இன்று காலை உயிரிழந்தார் என குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

பேராசிரியர் திஸ்ஸ விதாரண, 2004ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை இலங்கை பாராளுமன்றத்தில் தேசியப் பட்டியல் உறுப்பினராக பதவி வகித்தார். இடதுசாரி அரசியலில் நீண்டகால அனுபவம் கொண்ட அவர், நாட்டின் அரசியல் மற்றும் சமூக வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியவர் எனக் கருதப்படுகிறார்.

மேலும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சராகவும், பின்னர் சிரேஷ்ட அமைச்சராகவும் பதவி வகித்தார். அவரது காலத்தில் விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றத்திற்கான பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கையின் நீண்டகால இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணும் நோக்கில் அமைக்கப்பட்ட சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவராகவும் அவர் நியமிக்கப்பட்டு முக்கிய பங்கு வகித்தார். இந்த குழுவின் மூலம் தேசிய ஒருமைப்பாட்டை வலுப்படுத்தும் முயற்சிகளில் அவர் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.

அவரது மறைவு இலங்கை அரசியல் துறைக்கு பெரும் இழப்பாகக் கருதப்படுகிறது. அரசியல் தலைவர்கள், கட்சி உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் அவரது மறைவிற்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துள்ளனர். (அ)

## கரைவலை...

மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற் றது.

போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களை ஜனா திபதி அலுவலகத்திற்கு அழைத்த ஜனாதிபதி, அவர்க ளுடன் நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன், 2010 ஆம் ஆண்டு தொடங்கி, தொழிலாளர் பிரச்னை கள் காரணமாக 2013 ஆம் ஆண்டு முதல் வின்ச் இயந் திரத்தைப் பயன்படுத்தி செயல்பட்டு வரும் கரைவலை மீன்பிடித் தொழில்துறையின் தற்போதைய நிலைமை குறித்து அவர்கள் ஜனாதிபதியிடம் விளக்கினர்.

மேலும், மீனவர் பிரதிநிதிகள், தாங்கள் எதிர் கொள்ளும் நிலைமை குறித்து கவனத்தை ஈர்த்து, இந்தக் கலந்துரையாடலை வழங்கியதற்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தனர்.

மீனவர் பிரதிநிதிகள் தங்கள் அனுபவங்களின் அடிப்படையில் எழுப்பிய அனைத்துப் விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்திய ஜனாதிபதி, கரைவலை மீன்பிடித் தொழில் தொடர்பாக எழுந்துள்ள இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணும்போது, பொருளாதார ரீதியாக யாருடைய வாழ்க்கைத் தரத்திலும் பாதிப்பை ஏற்படுத்த அரசாங்கம் விரும்பவில்லை என்றும், ஒவ்வொருவரின் பொருளாதார நிலைமையையும் வலுப்படுத்த அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என்றும் வலியுறுத்தினார்.

மேலும், இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதில், பொது மீனவ சமூகம் முன்வைத்துள்ள முறைப்பாடுகள், சுற்றுச்சூழல் அமைப்புகள், இது தொடர்பாக விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சியில் ஈடுபடுகின்ற அரச நிறுவனங்கள், கடற்றொழில் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ள அறிக்கைகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் இதன்போது ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அதன்படி, மீனவர்களுக்கு ஏற்படும் பொருளாதார பாதிப்பைத் தடுப்பதற்கும், சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், சர்வதேச இணக்கப்பாடுகளுக்கு ஏற்பவும், எதிர்கால சந்ததியினருக்காக கடற்றொழில் மற்றும் கடல் வளங்களைப் பாதுகாப்பதற்கும், தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அதன்படி, அனைத்து தரப்பினரும் இணைந்து குறுகிய காலத்திற்குள் கலந்துரையாடல்கள் மூலம் மிகவும் பொருத்தமான தீர்வுகளை பரிந்துரைக்க இதன்போது ஒப்புக்கொண்டதுடன், போராட்டத்தை கைவிடவும் முடிவு செய்யப்பட்டது.

அனைத்து தரப்பினரின் பங்கேற்புடன் அடுத்த திங்கட்கிழமை குறித்த கலந்துரையாடல்களை ஆரம்பிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

கலந்துரையாடல்கள் இடம்பெறும் காலத்தில் தற்போது கரைவலை முறையின் கீழ் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் எதிர்கொள்ளும் குத்தகை போன்ற கட்டணச் சிக்கல்கள் குறித்து நிதி அமைச்சுடன் கலந்துரையாடல்களை நடத்துவதற்கும் மேலும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. (அ)

## ஜோன்ஸ்டன்...

மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர்களுக்கு எதிரான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதற்கமைய, குறித்த சந்தேக நபர்களை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வத்தளை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

லங்கா சதொச நிறுவனத்திற்கு சொந்தமான லொறியை தவறாக பயன்படுத்தியதாக நிதி குற்றவியல் புலனாய்வுப் பிரிவினரால் நடத்தப்பட்ட விசாரணையின் பேரில், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, அவரது மூத்த மகன் ஜோஹான் பெர்னாண்டோ, அவரது இளைய மகன் ஜெரோம் பெர்னாண்டோ மற்றும் லங்கா சதோச நிறுவனத்தின் முன்னாள் போக்குவரத்து மேலாளர் உள்ளிட்ட ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## போதைப்பொருள்...

இந்த நிலையில், அவர்கள் பிணையில் செல்ல கோரிக்கை விடுக்கும்போது, அவர்களுக்கு பிணை வழங்காமல் வழக்கு விசாரணை நிறைவடையும் வரை தடுப்பில் வைக்க முடியுமா என்பது குறித்து தற்போது ஆலோசனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைய, எதிர்வரும் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நச்சுப் பொருள் சட்டத் திருத்தத்தை மேலும் பலப்படுத்தும் வகையில் திருத்தம் ஒன்றை கொண்டு வரவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குற்றச்செயல்களின் மூலம் பெற்றுக்கொண்ட சொத்துகளை பறிமுதல் செய்யும் சட்டம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளமைக்கு அமைய, பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுவருவதாகவும் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# இலங்கையின் நல்லிணக்கத்துக்கு உதவ நாங்கள் தயாராகவுள்ளோம்

## ஆஸி. தூதுவர் தெரிவிப்பு



கொழும்பு, பெப். 14

இலங்கையின் நல்லிணக்க பயணத்துக்கு அவுஸ்திரேலியா தனது ஆதரவை வழங்கும். இது குறித்து அரசாங்கம் அளித்துள்ள சில அறிக்கைகள் எங்களுக்கு மிகுந்த ஊக்கமளிக்கின்றன. இலங்கை அரசாங்கத்துக்கு பயனுள்ள வகையில் எந்த வகையிலும் உதவ நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் இது இலங்கையர்களால் முன்னெடுக்கப்படும் ஒரு செயல்பாடாக அமைய வேண்டும் - இவ்வாறு இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் மத்தேவ் டக்வெர்த் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இலங்கை குறித்த தீர்மானங்களை நாங்கள் நீண்டகாலமாக ஆதரித்து வருகிறோம். ஏனெனில், இந்தச் செயல்பாட்டை முன்னோக்கி நகர்த்த இது ஒரு முக்கியமான வழி என்று நாங்கள் கருதுகிறோம். மேலும், இங்குள்ள சமூகத்தின் சில பிரிவினர், பொறுப்புக்கூறலை மேம்படுத்துவது தொடர்பாக என்னிடம் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

பாத்பைண்டர் அமைப்பு ஏற்பாடு செய்த அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகருடனான வட்டமேசை மாநாடு நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றது. இதில், கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்ட விடயங்களை குறிப்பிட்டார்.

ஜெனிவாவில் இலங்கை குறித்த தீர்மானங்களுக்கு அவுஸ்திரேலியா எப்போதும் ஆதரவளித்து வருகிறது. இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் நிலையை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள் என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்தபோதே ஆஸி. தூதுவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "சமூகத்தின் பல தரப்பினரும் இது குறித்து கவலை கொண்டுள்ளனர் என்பதை நாங்கள் அறிவோம். அவுஸ்திரேலியாவில் வாழும் பெரிய அளவிலான இலங்கை வம்சாவளி சமூகமும் இந்த செயல்பாடுகள் முன்னோக்கி நகர்வதை பார்க்க விரும்புகிறார்கள். சமீபத்திய ஆண்டுகளில் கவனிக்கப்படாமல் விடப்பட்ட இந்த விவகாரங்களை முன்னெடுத்துச் செல்வது குறித்து தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அளித்துள்ள சில அறிக்கைகள் எங்களுக்கு மிகுந்த ஊக்கமளிக்கின்றன. இலங்கை அரசாங்கத்திற்கு பயனுள்ள வகையில் எந்த வகையிலும் உதவ நாங்கள் தயாராக இருக்கிறோம்.

"ஆனால், இந்த பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்க செயல்பாடுகள் இலங்கையர்களால் முன்னெடுக்கப்படும் ஒரு செயல்பாடாக அமைய வேண்டும். நிச்சயமாக இது இலங்கையர்களால் முன்னெடுக்கப்படும் ஒரு செயல்பாடாக இருக்க வேண்டும், அவுஸ்திரேலியா போன்ற ஒரு வெளிநாடு இதனை கட்டாயப்படுத்தவோ அல்லது தீர்த்து வைக்கவோ முடியாது. ஆனால், எங்களால் செய்யக்கூடியது என்னவென்றால், நல்லிணக்கத்தைக் கொண்டுவருவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு எங்களால் முடிந்த ஆதரவை வழங்குவதுதான் - என்றார்.

## இறக்குமதியாகும் வாகனங்களுக்கு ஏப்ரல் முதல் புதிய வரி அறிமுகம்!

கொழும்பு, பெப். 14

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி முதல் 2.5 சதவீத வரி அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் அரோஷ ரொட்ரிகோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும், இது 2026 வரவுசெலவுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வரியாகும். இந்த வரி அறவீடானது சுங்கத் திணைக்களத்திலேயே மேற்கொள்ளப்படும். தற்போது சுங்கத்தில் விடுவிப்புச் செயல்பாடுகளில் உள்ள வாகனங்களுக்கு இந்த வரி பொருந்தாது.

வாகனங்களின் விலை அதிகமாக இருப்பதால், 2.5 சதவீத வரி என்பது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும். எளிமையாகச் சொன்னால், 100 இலட்சம் ரூபாய் பெறுமதியுள்ள ஒரு வாகனத்தின் விலை புதிய வரி காரணமாக சுமார் இரண்டரை இலட்சம் ரூபாயால் அதிகரிக்கும்.

எனவே, இந்த வரிச் சுமையால் வாகன விலையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை எதிர்பார்க்கலாம். எனினும், டித்வா புயல் பாதிப்புக்கு பின்னர் வாகன கொள்வனவில் மக்களி அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

## போக்குவரத்து நெரிசலை குறைக்க கொழும்பில் புதிய பேருந்து சேவை

### ஜனாதிபதி தலைமையிலான கூட்டத்தில் முடிவு

கொழும்பு, பெப். 14

கொழும்பு மாநகரில் தற்போது நிலவும் கடும் போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வாக "லங்கா மெற்ரோ ட்ரான்ஸிற்" பேருந்து சேவையை அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் தற்போது தயார் செய்யப்பட்டு வருகின்றன. எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்குள் இதற்கான பேருந்துகள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படவுள்ளன.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி பணிமனையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இந்த கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

## டித்வா பாதிப்பு கொடுப்பனவாக ரூ. 450 கோடி வழங்கப்பட்டது

கொழும்பு, பெப்.14

டித்வா புயலால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான கொடுப்பனவுகள் தொடர்ந்தும் வழங்கப்படுகின்றன. இதற்கமைய நிவாரணம் வழங்குவதற்காக 25 மாவட்டங்களுக்கும் 450 கோடி ரூபாய் நிதி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் கே. டி. தர்மதிலக தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு கூறினார்.

டித்வா புயலால 7 இலட்சத்து 3 ஆயிரத்து 922 குடும்பங்களைச் சேர்ந்த 24 இலட் சத்து 87 ஆயிரத்து 114 நபர்கள் பாதிக்கப்பட்டனர். 676 உயிரிழப்புகள் பதிவாகின. 155 பேர் காணாமல் போயினர். இன்னமும் ஆயிரத்து 373 குடும்பங்கள் முகாம்களில் தங்கியுள்ளன - என்றும் அவர் கூறினார்.

## மோ. சைக்கிள் விபத்தில் 17 வயது சிறுவன் மரணம்

கொழும்பு, பெப். 14

முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளை மற்றொரு மோட்டார் சைக்கிள் முந்திச் செல்ல முயன்றபோது கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதியதில் 17 வயது சிறுவன் உயிரிழந்தார்.

களுத்துறை - ஹொரணை - மிதெல்லமுலஹேன பகுதியில், தல்கஹவில வீதியில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் இருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இதில், மோட்டார் சைக்கிளின் பின்னிருக்கையில் அமர்ந்திருந்த 17 வயது சிறுவனே உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹொரணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காங்கேசன், திருமலை துறைமுகங்களை இந்தியாவுக்கு தாரைவார்க்க உடன்பாடு!

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு



கொழும்பு, பெப் 14

காங்கேசன் துறை, திருகோணமலை துறைமுகங்களை இந்தியாவுக்கு தாரைவார்க்க அரசாங்கம் முயற்சிக்கிறது. அரசாங்கத்தின் இந்திய மயமாக்கலுக்கு எதிராக அனைவரும் அணி திரள வேண்டும் - இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் தனது கட்சி பணிமனையில் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டின் மேற்பரப்பு மற்றும் கடல் தளத்திலுள்ள அரிய கனிம. வளங்களை வரைபடமாக்குதல், அடையாளம் காணுதல், வெட்டியெடுப்பதை இந்திய நிறுவனங்களுக்கு ஒப்படைக்க இந்த ஒப்பந்தம் திட்டமிட்டுள்ளது. இந்த ஒப்பந்தம், இரு அரசாங்கங்களின் ஒப்பந்தத்துடன் இந்திய நிறுவனங்களுக்கு கனிமமயமாக்கப்பட்ட பகுதிகளை ஒதுக்கவும் இந்திய பொது மற்றும் தனியார் துறைகளின் முதலீடுகளை ஊக்குவிக்கவும் திட்டமிட்டுள்ளது.

சிலோன் கிராஃபைட், நீல சபையர், புல்முடே கனிம மணல் (இல்மனைட்,ரூட்டைல், சிர்கான், மோனாசைட்), உயர் தர சிலிக்கா, ராக் பாஸ் பேட், டோலமைட் மற்றும் கடலுக்கு அடியில் உள்ள கோபால்ட் படிவுகள் போன்ற வளங்களை இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா கையகப்படுத்தும் அபாயம் உள்ளது. இந்த வளங்கள் தொழில் நுட்பத் தொழில்களுக்கு அவசியமானவை. இந்த முடிவு நாட்டின் பொருளாதாரத்துக்கு மிகவும் முக்கியமானது.

இந்தத் திட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணி, தேசிய மக்கள் சக்தி என்பன ஈடுபட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா, ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் இந்திய பயணங்கள் ஒப்பந்தத்தை விரைவுபடுத்துவதில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இலங்கையில் இந்திய மயமாக்கலுக்கு எதிராகப் போராடிய ஒரு கட்சியாக மக்கள் விடுதலை முன்னணி ஆரம்பத்தில் காணப்பட்டது. இந்த நடவடிக்கை துரோகமானது, மக்கள் ஒன்றுபட்டு அதற்கு எதிராகப் போராட வேண்டும் - என்றார்.

## தபால் சேவையை நவீனமாக்க புதிய வாகனங்கள் இணைப்பு!

### 2,800 பேரை உள்ளீர்க்கவும் நடவடிக்கை

கொழும்பு, பெப். 14

தபால் சேவையை நவீனமயமாக்க 59 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியுள்ள 10 பாரவூர்திகள், 20 க்ரூகெப் வாகனங்கள் அந்த வலையமைப்பில் இணைக்கப்பட்டன.

நேற்று முன்தினம் தபால் தலைமையகத்தில் நடைபெற்ற இந்தநிகழ்வில் சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, பிரதி அமைச்சர கௌஷல்யா ஆரியரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

நாடளாவிய ரீதியில் தபால் பொருட்கள், பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளும் சேவை, தபால் கூரியர் சேவைகளை விரைவுபடுத்த இந்தப் புதிய வாகனங்கள் பயன்படுத்தப்படும். அத்துடன், தபால் ஊழியர்களுக்கான சைக்கிள்கள், அலுவலகத் திறனை அதிகரிக்க கணினிகள், மடிக்கணினிகள், கைகணினிகளும் வழங்கப்பட்டன.

இங்கு உரையாற்றிய அமைச்சர், "கடந்த ஆண்டு இரண்டு பெரும் சவால்கள் ஏற்பட்ட போதிலும் தபால் திணைக்களம் ஆயிரத்து 345 கோடி ரூபாயை வருமானமாக ஈட்டியுள்ளது. சேவையை வலுப்படுத்த 2,800 பணியாளர்கள் புதிதாக இணைக்கப்படவுள்ளனர்", என்றும் கூறினார்.

# மோட்டார் போக்குவரத்து திணைக்கள முன்னாள் பிரதி ஆணையாளர் கைது!

கொழும்பு, பெப். 14

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் கார் பதிவு பிரிவின் முன்னாள் பிரதி ஆணையாளர் ஒருவர் இலஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட அவர், தற்போது நிதி அமைச்சின் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களத்தில் பணியாற்றி வருகிறார்.

2017 பெப்ரவரி 17 ஆம் திகதி, முறையான சட்டபூர்வ ஆவணங்கள் இன்றி, ஜி. இசற். - 6889 என்ற இலக்கத்தைக் கொண்ட காரை சட்டவிரோதமான முறையில் மற்றொருவருக்கு கைமாற்ற அனுமதி வழங்கியதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.02.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.